**தலைப்பு – 138 சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

## 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| **தலைப்பு** | **திணைக்களப் பெயர்** |
|---|---|
| 220 | ஆயுர்வேத திணைக்களம் |

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேற்கூறப்பட்ட 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சுதேச மருத்துவத்துறை அமைச்சினதும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்படும் திகதிகளில் அமைச்சின் செயலாளரிற்கும் திணைக்களங்களின் தலைவர்களிற்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | திணைக்களப் பெயர் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 138 | சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 2015 யூலை 02 |
| 220 | ஆயுர்வேத திணைக்களம் | 2015 யூலை 09 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,868.56 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,627.70 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 72.42 மில்லியன் மற்றும் ரூபா 168.44 மில்லியன் அதாவது 13.90 சதவீதம் மற்றும் 12.49 சதவீதம் ஆகக் காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 138 | 521.00 | 448.58 | 72.42 | 13.90 |
| 220 | 1,347.56 | 1,179.12 | 168.44 | 12.49 |
| மொத்தம் | **1,868.56** | **1,627.70** | **240.86** | 12.89 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

-----------------------------------

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------------

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

-------------------------------------------------------------------------------

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 13801 | 13.00 | 9.59 | 4.00 | 6.97 | 36.00 | 23.74 |
| 22001 | 30.00 | 29.43 | 21.00 | 28.15 | 170.00 | 78.52 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

--------------------------------------------------

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23.31 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 6000/0000/00/0015/0050/000 | 0.64 |
| ஆயுர்வேத திணைக்களம் | 6000/0000/00/0015/0101/000 | 22.67 |
| மொத்தம் | | 23.31 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சுதேச மருத்துவத்துறை அமைச்சினதும் அந்த அமைச்சின் கீழுள்ள ஆயுர்வேதத் திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 முதல் 4 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 138 - சுதேச மருத்துவத்துறை அமைச்சு

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

அமைச்சினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2015 யூலை 03 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.3.1 பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 8,835,000 மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 28 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்குமிடையேயான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

விடய இலக்கம் 13801 இற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,295,374 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலப்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) அமைச்சினால் கடன் கொடுப்பனவுகளிற்கு பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் பின்பற்றப்படாது ரூபா 416,490 தொகையான கடன்கள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2005 யூலை 15 ஆந் திகதி இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரினால் பெறப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 288,618 ஆக இருந்தது. தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1:7 ஆம்

உட்பிரிவின் பிரகாரம் அக்கடன் கோவை அமைச்சின் பொறுப்பில் வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்தக் கடன் கோவை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த உத்தியோகத்தரிடமிருந்து கடன்மீதி தீர்க்கப்படாதிருந்ததுடன் 09 வருட அளவிலான காலம் கடந்திருந்த போதிலும் அமைச்சினால் அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மரணித்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 129,499 கூட்டுத் தொகையான கடன் மிதிகள் அவர்களின் மரண பணிக்கொடையிலிருந்து அல்லது ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டின் போது இடமாற்றலாகிச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 541,545 தொகையான கடன் மீதிகள் மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

---

### 3.5.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 உள்ளகக் கணக்காய்வு

---

2014 ஆம் ஆண்டிற்காக அமைச்சிற்கு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உத்தியோகத்தர்கள் இருவரைக் கொண்ட உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மீளாய்வாண்டிற்காக ஒரு உள்ளக கணக்காய்வு ஐயவினா மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**3.5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

---

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 04 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்கத்தின் ஹோமியோபதி வைத்தியசாலை வளாகத்தில் உள்ள ஆய்வுகூடம், சமயலறை மற்றும் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட 03 கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) 43 பொருள் வகைகள் உடைந்தமையின் காரணமாக பாவனையின்றி இருந்ததுடன் அப்பொருள் வகைகளை அகற்றுவதற்கு பொருள் மெய்மையாய்வுச் சபையினால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 அந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் 2015 யூன் 24 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

(ii) பொருட் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட அச்சிடல் இயந்திரம் மற்றும் மின்சார கேத்தல் என்பன பௌதீக ரீதியில் ஹோமியோபதி வைத்தியசாலையில் காணப்படவில்லை.

(iii) ஹோமியோபதி வைத்தியசாலை அலுவலக வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த 05 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள் 2015 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் செயலிழந்து காணப்பட்டதுடன் அவைகளைப் பழுதுபார்த்து செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

---

அமைச்சிற்குச் சொந்தமான லொறி வண்டியொன்று இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கு 2013 யூன் 02 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

---

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத 01 வருடத்திற்குக் குறைந்த காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,368,929 தொகையான பொறுப்புக்கள் காணப்பட்டன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 115 இன் கீழ் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது ரூபா 669,838 தொகை முன்னைய ஆண்டின் பொறுப்புக்களுக்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்குரியதாகச் செலுத்தப்பட்ட ரூபா 120,036 தொகையான செலவினம் டீ.ஜீ.எஸ்.ஏ(i) மாதிரிப் படிவத்தில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) 06 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி ரூபா 515,999 தொகையான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

**3.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| XII ஆம் அத்தியாயத்தின் 35.1 ஆம் பிரிவு | ஹோமியோபதி வைத்தியசாலையின் சில உத்தியோகத்தர்கள் 1 ½ மணித்தியால காலத்தை விஞ்சி குறுகிய கால விடுமுறை பெற்றிருந்தனர். குறுகிய கால விடுமுறை காலத்தை விஞ்சும் போது ½ நாள் விடுமுறையொன்று அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு குறுகியகால விடுமுறையை விஞ்சும் 03 சந்தர்ப்பத்திற்கு ½ நாள் வீதம் விடுமுறை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் | |
| (i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுதேச வைத்தியத்துறை அமைச்சரின் 11 குழாம் வாகனங்கள் தொடர்பாக 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் விபரிக்கப்பட்ட வாகன வகையின் கீழ் இல்லாத குழாம் வாகனமொன்றிற்கு அரசாங்க இலட்சனை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.8 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

---

போசனை வளாகத்தைச் சுற்றி மண் நிரப்புவதற்காக ஆயுர்வேதத் திணைக்களத்தின் பொறியியலாளரினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அதன் கிரயம் ரூபா 341,941 ஆக இருந்தது. மேலதிக செயலாளர் அபிவிருத்தியின் 2014 யூலை 02 ஆந் திகதிய 02/01/65-1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கேள்விகோரலின்றி போசனை வளாகத்தைச் சுற்றி மண் நிரப்பி செப்பனிடுமாறு இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தால் அதற்காக ரூபா 863,756 தொகையான மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 02/01/65-1 ஆம் இலக்க பணிப்பாளர் (அபிவிருத்தி) யின் கடிதத்தின் மூலம் போசனை வளாகத்தைச் சுற்றி மண் நிரப்பும் பணிக்காக ரூபா 125,000 தொகையில் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சினால் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ரூபா 87,475 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சால் போசனை வளாகத்தைச் சுற்றி மண் நிரப்புவதற்காக கேள்வி கோரப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் கோவையில் காணப்படவில்லை.

(ஆ) 2012 சனவரி 05 ஆந் திகதிய PED/PMD/Clari/11/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கு முரணாக பிரதேச செயலாளரின் சிபாரிசு இன்றி போசனை வளாகத்தைச் சுற்றி மண்நிரப்பும் பணிகள் ரூபா 125,000 இற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) திணைக்களத்தின் மதிப்பிடு ரூபா 341,941 தொகையாகவும் அரச பொறியில் கூட்டுத்தாபனத்தின் மதிப்பீடு ரூபா 863,750 தொகையாகவும் இருந்தபோதும், ரூபா 125,000 இற்கு அந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமை தொடர்பாக பொருண்மையான முரணொன்று ஏற்பட்டிருந்த போதும், அது தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இந்த மண் நிரப்பும் பணிகளை நிறைவேற்றும் போது பொரளை வைத்தியசாலை வளவிலும் மண் பெறப்பட்டமை முறைப்பாடு

செய்யப்பட்டமையால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய தொகையில் 70 சதவீதம் அளவில் செலுத்துமாறு 2014 திசெம்பர் 24 ஆந் திகதி கடிதத்தில் பொறியியல் உதவியாளர் செய்திருந்த அறிவித்தலின் படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) போசனை வளாகத்தைச் சுற்றி மண் நிரப்புவதற்கு பொரளை வைத்தியசாலையிலிருந்து எவ்வளவு மண் எடுக்கப்பட்டது என எழுத்து மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கோவைகளைப் பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே வைத்தியசாலை வளவிலிருந்து மண்ணை அகற்றுவதற்கான அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பொரளை வைத்தியசாலை வளவிலிருந்து பெறப்பட்ட மண்ணின் அளவு குறிப்பாக கண்டறியப்படாது அதற்காக ரூபா 37,525 தொகை அதாவது மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 30 சதவீத அளவு குறைக்கப்பட்டு கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானித்திருக்கும் போது அந்த அளவு கணிப்பீடு செய்யப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) இந்த ஒப்பந்தக்காரரினால் விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படும் போது அந்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட மண்களின் அளவு தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் பிரச்சினைகளுக்குரிய நிலைமை காணப்பட்ட மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சால் உரிய கவனம் செலுத்தப்படாது ரூபா 87,475 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.9 செயலாற்றல்**

**-----------------**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

--------------------------------------------------------------------------------------

அமைச்சினால் பிரதான பணிகள் போதியளவாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) றாகம வெலிசற ஹோமியோபதி வைத்தியசாலை வளவில் ரூபா 55,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட விடுதிக் கட்டிடம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 யூன் 25 ஆந் திகதி வரையிலும் அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) றாகம வெலிசற ஹோமியோபதி வைத்தியசாலையைச் சுற்றி வேலியொன்று ரூபா 10,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2014 திசெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த செயற்பாடுகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) 2014 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 03 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு இளைஞர் மூலிகை விவசாயக் கிராம செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது இரண்டு கிராமங்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒரு கிராமத்தில் ஒரு பகுதியில் தற்போது கிராந்துறு கோட்டை மூலிகை தோட்டம் பேணப்பட்டிருந்தது.

(iv) 2014 திசெம்பர் மாதம் அளவில் மூலிகை செடி பயிரிட்டு அறுவடை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மூலிகை செடி நடுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பாதுகாப்பு சபையைக் கட்டியெழுப்பும் செயற்திட்ட மதிப்பிட்டிற்காக மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான குழுவொன்று 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) பாதுகாப்பு சபையினால் எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம் மற்றும் மருந்துகளைத் துளாக்கும் 109 இயந்திரங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது 32 இயந்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் காரணமாக போசனை – அகற்றுதல்

சுதேச உணவுகள் மற்றும் பானங்களை மேம்படுத்துவதன் மூலம் பொதுமக்களின் போசனை நிலையை மேலோங்கச் செய்யும் நோக்கில் ரூபா 300,000 செலவில் மதவாச்சி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட போசனை மனை வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது அகற்றப்பட்டிருந்தது. அதற்காக வழங்கப்பட்ட இழப்பீட்டுப் பணம் தொடர்பாகவும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் பின்னர் மீண்டும் அந்த மனையை நிர்மாணிக்காமை தொடர்பாகவும் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நடமாடும் விற்பனை வண்டிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

சுதேச உணவுகளை மேம்படுத்தும் நோக்கத்தில் அமைச்சால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு இணைந்தாக அலகொன்றின் பெறுமதி ரூபா 94,500 தொகையான 10 நடமாடும் வண்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

i. விற்பனை வண்டி வழங்கப்பட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளிலிருந்து வெளிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

ii. நடமாடும் விற்பனை வண்டியைப் பெற்ற ஒரு பயனாளியிடமிருந்து மாத்திரம் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை கோவையில் காணப்பட்டதுடன் ஏனைய 09 பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை கோவைகளில் காணப்படவில்லை.

iii. நடமாடும் விற்பனை வண்டிகளைப் பெற்ற இரண்டு பயனாளிகள் தமது இரண்டு விற்பனை வண்டிகளையும் வேறு இரண்டு நபர்களிற்கு கையளித்திருந்தனர்.

iv. 02 நடமாடும் விற்பனை வண்டிகளைப் பெற்ற இரண்டு பயனாளிகளினால் நோக்கத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாது அந்த வண்டிகள் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) பாரம்பரிய வைத்திய இல்ல நிகழ்ச்சித்திட்டம்

----------------------------------------------------------------------

பாரம்பரிய வைத்திய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

i. இந்த செயற்திட்டம் தொடர்பாக 2011 ஆம் ஆண்டின் போது நிதி அமைச்சின் பணிப்புரையின் படி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் பாரம்பரிய வைத்தியத்திற்காக மாத்திரம் பயன்படுத்துவதற்காக உரிய இரு தரப்பினர்களுக்குமிடையே உடன்படிக்கைகளில் கைச்சாத்திட சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 40,933,388 மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 42 வைத்திய வீடுகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது பிரதேச செயலாளர்கள் மூலம் பாரம்பரிய வைத்திய வீடுகளின் தற்போதைய செயல் முன்னேற்றம் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறு செயல் முன்னேற்றம் கோரப்பட்ட 42 பாரம்பரிய வைத்திய வீடுகளில் ரூபா 13,017,857 மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 13 பாரம்பரிய வைத்திய இல்லங்களின் செயல் முன்னேற்றம் தொடர்பான விபரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

iii. 2014 மார்ச் மாதத்தின் போது பிரதேச செயலாளர்களின் மூலம் வைத்திய இல்லங்களின் தற்போதைய செயல் முன்னேற்றம் கோரும் போது ரூபா 5,470,556 மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 07 பாரம்பரிய வைத்திய இல்லங்களின் தகவல்கள் கோரப்பட்டிருக்கவில்லை.

iv. மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 2,007,150 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 02 பாரம்பரிய வைத்திய இல்லங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

v. அமைச்சால் அரசாங்கத்தின் நிதி செலவில் நிர்மாணிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பாக கடிதமொன்றின் மூலம் செயலாளர் (அபிவிருத்தி) மூலம் விசாரணை செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. பாரம்பரிய வைத்திய இல்லம் தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மூலிகைத் தோட்டம்

-------------------------------

அமைச்சின் கீழ் காணப்படுகின்ற மூலிகைத் தோட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

i. ஆராய்ச்சி மூலிகைத் தோட்டத்தை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் அமைச்சின் பணியாக இருந்த போதிலும், அமைச்சின் கீழுள்ள 02 மூலிகைத் தோட்டங்கள் (வெதகம மூலிகைத் தோட்டம் 44 ஏக்கர், மெதிரிகிரிய மூலிகைத் தோட்டம் 25 ஏக்கர்) மற்றும் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற 05 மூலிகைத் தோட்டங்கள் (நீலபெம்ப 25 ஏக்கர், மதவாச்சி தங்கொல்ல 50 ஏக்கர், பதவியா மூலிகைத் தோட்டம் 25 ஏக்கர், ஹிவல் கந்துர 100 ஏக்கர் மற்றும் பீல்ல அம்பன்பொல 69 ஏக்கர்) என்பவற்றில் காட்டுத் தாவரங்கள் வளர்ந்து காணப்பட்டதுடன் பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ii. மூலிகைத் தோட்டங்களின் காணிகளைக் கையேற்பதில் பிரச்சினைகள் காணப்பட்டன.

iii. மூலிகைத் தோட்டங்கள் போதுமானதற்ற உற்பத்திகள் மேற்கொண்டமையின் காரணமாக ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கும் ஆயுர்வேத திணைக்களத்திற்கும் பச்சை மருந்துகள் வெளி நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) திட்டமிடல்

-----------------

அமைச்சின் 2012 – 2016 ஆம் ஆண்டுகளுக்குத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம், ஹோமியாபதி வைத்தியசாலை வளவில்

நிர்மாணிக்கப்படுகின்ற விடுதித் தொகுதி மற்றும் ஹோமியோபதி வைத்திய சபையின் நிர்வாகக் கட்டிடத்தை பழுதுபார்த்தல் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கியிருக்காத போதிலும், 2014 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத்திட்டத்தில் அந்தச் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் பௌதீக ரீதியாகவும் அந்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.

## 3.10 வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

அமைச்சின் வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பரீட்சிப்பின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் 6 மாதங்களுக்கு மேற்பட்டதும் ஒரு வருடத்திற்கு குறைந்ததுமான வழங்கப்பட்டிருந்ததும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 21,971 கூட்டுத்தொகையான 3 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் மாதத்தின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்ட ரூபா 98,942 தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகளில் 2015 சனவரி மாதத்தின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கும் போதும் ரூபா 95,900 கூட்டுத்தொகையான காசோலைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையினதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 6 நீர்வடிகலன்கள் ரூபா 87,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஒரு நிறுவனத்தினால் 05 நீர்வடிகலன்கள் அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையில் கொள்வனவு செய்யும் போது ஒன்று ரூபா 14,000 வீதம் குறிப்பிடப்பட்டு கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சால் ஒன்று ரூபா 14,500 வீதம் கேள்வி சமர்ப்பித்திருந்த நிறுவனத்திலிருந்து ரூபா 87,000 தொகை செலுத்தி 06 நீர்வடிகலன்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 3,000 நிதி ரீதியான நட்டமொன்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2012 சனவரி 10 ஆந் திகதிய அமைச்சின் சிறு கொள்வனவுக் குழுக் கூட்ட அறிக்கையின் பிரகாரம் மாதமொன்றிற்கு 100 நீர்ப் போத்தல்கள் தேவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. நீர்ப் போத்தலினை கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரப்பட்டிருந்தது. அதன் படி ஒரு நிறுவனத்தினால் 50 நீர்ப்போத்தல்கள் அல்லது அதிகமாகக் கொள்வனவு செய்யும் போது நீர்ப்போத்தலொன்று ரூபா 165 இற்கு வழங்க முடியுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அமைச்சால் வேறொரு நிறுவனத்திலிருந்து ரூபா 175 வீதம் நீர்ப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) சாரதி அறைக்கு 2014 சனவரி 02 ஆந் திகதி கோரப்பட்டிருந்த தண்ணீர் போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்காக கோரப்பட்ட கூறுவிலைகளின் பிரகாரம் தனியார் நிறுவனமொன்றிலிருந்து 19 லீற்றர் அளவான நீர் போத்தலொன்று ரூபா 170 இற்கு வழங்க முடியுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 18.9 லீற்றர் அளவான நீர் போத்தலொன்று ரூபா 175 விதம் வேறொரு நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஹோமியோபதி வைத்திய சபையிடமிருந்து 2012 மே மாதத்தின் போது வைத்தியசாலைக்குக் கிடைத்த 927 வகையான பழைய மருந்து போத்தல்கள் கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. 2012 நவம்பர் காலாவதியான திகதியாக குறிப்பிடப்பட்டிருந்த 367 மருந்து போத்தல்கள் 2015 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் அகற்றப்படாது காணப்பட்டது. அதன் பிரகாரம் பயன்படுத்துவதற்கு முடியுமான மருந்துகளை விநியோகிப்பதற்கும் காலாவதியான பயன்படுத்தப்பட முடியாத மருந்துகளை அகற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.12 நட்டமும் இழப்பும்

-----------------------------------

2013 மே 26 ஆந் திகதி ஹோமியோபதி வைத்தியசாலையில் மதிலின் ஒரு பகுதி உடைந்து விழுந்தமையின் காரணமாக மின்சார தனியார் கம்பனிக்குரிய மின் கம்பமொன்றிற்கு சேதம் ஏற்பட்டமையால் ரூபா 67,200 இழப்பீடு கோரப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2014 யூன் 05 ஆந் திகதிய எச்எம்/சீ/எம்ஜஎம்/2013/11 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. வைத்தியசாலை மதிலில் உடைந்து விழுந்த பகுதி கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. மதிலில் தற்போது எஞ்சியுள்ள பகுதியும் அத்திவாரமும் இடையிடையே வெடித்திருந்தமையால் அது

தனியார் வீடுகளுக்கு உடைந்து விழும் அபாயம் காணப்படுகின்றமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.13 மனித வளங்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 43 | 36 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 601 | 377 | 224 |
| (iv) | ஆரம்ப நிலை | 56 | 47 | 09 |
| | மொத்தம் | 702 | 461 | 241 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 241 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) அமைச்சிற்கு சட்ட உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்க்கப்படாமை

---------------------------------------------------------------------------------------------------------

2012 செப்தெம்பர் 20 ஆந் திகதிய 01/06/45 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சுதேச வைத்தியத்துறை அமைச்சிற்கு சட்ட உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. அந்த வேண்டுகோளின் படி 2012 ஒக்தோபர் 02 ஆந் திகதிய DMS/C2/37/01(VOL.1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்திலும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் 2013 யூலை 23 ஆந் திகதிய கடிதத்திலும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சட்ட உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு ரூபா 87,360 தொகை செலவில் மூன்று பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 2014 சனவரி 17 அந் திகதி வரையில் அதற்காக 21 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 பெப்ரவரி 05 ஆந் திகதி வரையிலும் சட்ட உத்தியோகத்தர் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 4. தலைப்பு 220 – ஆயர்வேதத் திணைக்களம்

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |

### 4.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 16 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2015 யூலை 03 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 30,428,558 ஆகும்.

### 4.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 4.3.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,486,000 மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 23 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த

செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்குமிடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**4.4 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களை விஞ்சிய (காணி வைப்புக்கள் தவிர) ரூபா 2,451,781 கூட்டுத்தொகையான 66 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் வைப்புக் கணக்கொன்றில் நிச்சயமற்றதாக வைக்கப்பட்ட பணம், காலாவதியான வைப்பாக கருதப்படுவதற்கு இடமளிக்காது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உரிய கணக்கிற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கிடைத்த ரூபா 3,097,500 தொகையான வருமானம் 2015 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைச்சிற்குச் சொந்தமான வான் வாகனமொன்று ஒரே தினத்தில் இரு தடவைகள் விபத்துக்குள்ளாகி பழுதுபார்ப்பதற்காக கராஜிற்கு 2014 யூலை 03 ஆந் திகதி ரூபா 49,101 மற்றும் 2014 ஒக்தோபர் 25 ஆந் திகதி மேலும் ரூபா 49,101 செலுத்தப்பட்டதாக பொது வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய 2014 நவம்பர் மாத இறுதியில் உள்ளவாறு ரூபா 49,101 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட இந்த பிழையான கொடுப்பனவுகள் தொடர்பாக அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் நிதிப்பிரமாணம் 570 இல் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் காலாவதியான சகல வைப்புக்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புப் பேரேட்டில் காணப்பட்ட ரூபா 28,025 தொகையான வைப்பு மீதி 2014 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாக கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படாத ரூபா 247,504 தொகையான வைப்பு மீதி 2014 சனவரி 01 ஆந் திகதிய மீதியாக பொது வைப்புக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி பொது வைப்புப் பேரேட்டில் காணப்பட்ட ரூபா 9,500 பெறுமதியான வைப்பு மீதிகள் திணைக்களத்தின் புத்தகங்களின் மீதிகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிப்பட்டியல் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஏ) 2014 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 103,212 தெகையான வைப்பு மீதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதி மீதிக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புப் பேரேட்டுக் கணக்கில் ரூபா 64,053 தொகையான மீதியொன்று அத்திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதி கணிப்பிடும் போது எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

---

22001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,874,045 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான காலவீச்சிற்கு மேற்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு ஆதனக்கடன் வழங்கும் போது இரத்துச் செய்யமுடியாத அட்டோர்னி அனுமதிப்பத்திரம் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டின் இறுதியிலுள்ள தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆண்டின் இறுதி மீதிக்கும் இடையேயான இணக்கக் கூற்றில் காணப்பட்ட ரூபா 667,724 தொகையான வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இட மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 2,220,155 தொகையான கடன் மீதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்த கடன் மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,125,664 கூட்டுத்தொகையான மீதியும் இருந்தது.

(உ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,248,230 தொகை சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது. அந்தக் கடன் மீதிகளில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற கடன் மீதி ரூபா 610,750 ஆகும்.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய 05 வருடங்களை விஞ்சிய கடன் மீதி ரூபா 201,360 ஆகும். இவ்வாறு வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் திணைக்களத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்றுச் சென்ற 22 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டியிருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,008,800 ஆக இருந்ததுடன் அந்தக் கடன் மீதியில் ரூபா 226,600 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து உரிய கடனைத் தீர்ப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) திணைக்களத்தால் ரூபா 24,820 தொகையான கடன்கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்தக் கடன் மீதி தொடர்பான போதியளவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 7 பொதுச் சுகாதார வைத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 203,055 தொகையான கடன் மீதியில் எவ்வித கடன் தவணைப் பணமும் 2014 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கடன் கோவை பரீட்சிப்பின் போது 5 உத்தியோகத்தர்களின் கடன் அட்டைகளில் ஆயுர்வேத ஆணையாளருக்குப் பதிலாக கையொப்பம் இடவேண்டிய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் கையொப்பம் இட்டிருக்கவில்லை.

(ஓ) 2013 ஆம் ஆண்டின் போது முற்பணக் கணக்கில் இரு தடவைகள் பதியப்பட்ட ரூபா 70,605 கடன் தொகை 2014 ஆம் ஆண்டின் போதும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---------------------------------------------------------------------

#### 4.6.1 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------------------

ஆயுர்வேதத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் ஒரு கணக்காய்வு உத்தியோகத்தர் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 05 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை இதனை விட வலுப்படுத்துவது தொடர்பில் திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

#### 4.6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

### 4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------------------

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

பொரளை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 2011 செப்தெம்பர் 26 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட கதிர்வீச்சு இயந்திரம் 2012 நவம்பர் 01 ஆந்

திகதி முதல் 2015 யூலை 10 ஆந் திகதி வரை செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 அந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 யூன் 24 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

## 4.8 இணங்காமைகள்

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** |
|---|---|---|
| | **ரூபா** | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக்கோவை | | |
| (i) நிதிப் பிரமாணம் 264 | 1,124,884 | (i) ஆயுர்வேதத் திணைக்களத்தால் 2014 யூன், யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் 35 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,124,884 தொகையான சம்பளம் அந்த உத்தியோகத்தர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கு 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | 3,127,326 | (ii) உள்ளக பயிற்சி பெறுகின்ற 71 ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் பயிற்சி பெறுகின்ற 24 தாதி உத்தியோகத்தர்களுக்கும் 2014 மார்ச் மாதத்தின் போது முறையே ரூபா 2,561,118 தொகை மற்றும் ரூபா 566,208 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த சம்பளம் பெற்றமைக்கு உரிய உத்தியோகத்தர்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் கையொப்பம் இட்டு உறுதிப்படுத்தியிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 1645 | - | திணைக்களத்திற்குரிய 5 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 1646 | - | 14 வாகனங்களின் சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) அரச நிர்வாகச் சுற்றறிக்கைகள்

---------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) 2012 திசெம்பர் 24 ஆந் திகதிய EST8/ALOWN/05/0059 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | | 2014 ஏப்ரல் 29 ஆந் திகதிய 02/04/01/1/2014 ஆம் இலக்க ஆயுர்வேத ஆணையாளரின் கடிதத்தின் மூலம் வாகனங்களை வாடகைக்கு பெறுவதிலும்பார்க்க விரிவுரையாளர்களின் தனிப்பட்ட வாகனங்களை ஈடுபடுத்துதல் அரசாங்கத்திற்கு மிகவும் சிக்கனமானதாகவும் அதற்காக அவரின் தனிப்பட்ட வாகனத்திற்கு மைல் கட்டணம் செலுத்துமாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் தனிப்பட்ட கெப் வண்டிக்கு 03 தினங்களுக்கு ரூபா 27,929 வாடகை திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சற்றறிக்கை | | திணைக்களத்திற்குச் சொந்தமான 39 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சித்தல் 2014 ஒக்தோபர் 27 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | | திணைக்களத்திற்குரிய உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்படாத 05 வாகனங்களுக்கு அரச இலட்சினை கணக்காய்வுத் திகதியான 2014 ஒக்தோபர் 28 வரையிலும் பொறிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை<br>-------------------------------------- | | |
| 2002 செப்தெம்பர் 30 அந் திகதிய 364(3) அம் இலக்க சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பெறுமதி சேர் வரியாக 2012 ஆம் ஆண்டிற்காக தனியார் கம்பனியொன்றிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 709,059 தொகை மற்றும் 2014 ஆம் ஆண்டிற்காக பல்வேறு நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 548,844 தொகை என்பன மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக (NBT) செலுத்தப்பட்ட ரூபா 61,602 தொகை தொடர்பான அறிக்கை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை<br>------------------------------------------------ | | |
| (i) 3.3 ஆம் வழிகாட்டி | 2,844,763 | போட்டியாளர் விலைகள் கோரப்படாமல் வரையறுக்கப்பட்ட கூறுவிலை கோரப்பட்டு திணைக்களத்தின் நூலகத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,844,763 தொகை செலவில் தளபாட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

(ii) 2.8.4 ஆம் வழிகாட்டி

திணைக்களத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்களில் கொள்வனவு தொடர்பான தொழில்நுட்ப அறிவும் நிபுணத்துவமும் உள்ள ஒருவர் மற்றும் கொள்வனவு தொடர்பான அறிவுள்ள வரிசை அமைச்சின் அல்லது கொள்வனவு நிறுவனத்திற்கு வெளியேயுள்ள நபர் ஒருவரை உள்ளடக்கும் வகையில் மூன்று உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக 03 வைத்தியர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தரை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

## 4.9 செயலாற்றல்

--------------------------

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

--------------------------------------------------------------------------------------

திணைக்களத்தால் பிரதான பணிகள் நிறைவேற்றப்படாதிருந்த சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) யக்கல ஆயுர்வேத வைத்தியசாலையில் நிர்வாகக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தைக் கையளித்தல்.

(ஆ) கைதடி வைத்தியசாலைக்காக உற்பத்திக்கூடமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தைக் கையளித்தல்.

(இ) மண்வன்துடுவ ஆயுர்வேத வைத்தியசாலையின் வாட்டுத் (ward) தொகுதியின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தைக் கையளித்தல்.

(ஈ) திருகோணமலை ஆயுர்வேத வைத்தியசாலை நிர்மாணத்திற்கான ஒப்பந்தக் கையளித்தல்.

(உ) அம்பாந்தோட்டை ஆயுர்வேத வைத்தியசாலையின் மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்கான அறையொன்றை நிர்மாணித்து பூர்த்தி செய்தல்.

(ஊ) ஹல்துமுல்ல மூலிகைத் தோட்டத்தில் பெண் ஊழியர் ஓய்வறை நிர்மாணம்.

(எ) பட்டிபொல மூலிகைத் தோட்டத்தில் சமயலறை நிர்மாணத்தின் இரண்டாம் கட்டம்

### 4.10 வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் மாததத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று பிழையான முறையில் தயாரிக்கப்பட்டு கணக்காளர் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் உரிய பதவிநிலை உத்தியோகத்தரினால் அது பரீட்சிக்கப்படாமல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

### 4.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்ப்பிக்கப்படுகின்றன.

(அ) பொரளை வைத்தியசாலையின் உள்ளக மருந்தகத்திற்காக கதவொன்றைப் பொருத்துவதற்கு ரூபா 34,505 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு கூறுவிலை கோரப்படாமல் அந்த ஒப்பந்தம் வைத்தியசாலையில் வேறொரு பழுதுபார்த்தல்களை மேற்கொள்கின்ற ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அந்தக் கதவின் மேற்பகுதியில் சட்டமொன்றுடன் மேலும் தேவையான மாற்றங்களைச் செய்து ரூபா 64,443 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் அந்தச் செயற்பாடு கையளிக்கப்பட்டு ரூபா 74,087 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட பிரகாரம் கதவு நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தில் தொற்றாத நோய்களுக்கான ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாடுகளிலிருந்து சுதேச வைத்திய முறைமை தொடர்பான தேசிய நிறுவனத்திற்கு மடி கணனியொன்று 2014 சனவரி 08 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தது.

(இ) மேலும் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது ரூபா 7,400 தொகை செலவிட்டு 04 ஸ்கானர் இயந்திரங்களுக்கான மாதிரிகளைத் தயாரித்து கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் ரூபா 475,000 செலவிட்டு ஸ்கானர் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**4.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பொரளை வைத்தியசாலையில் ரூபா 549,617 தொகை செலவில் மேற்கொள்ளப்பட்ட திணைக்களத்தின் பழுதுபார்த்தலொன்றுக்காக கொள்வனவுக் குழுவின் தீர்மானமின்றி வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன் கூறுவிலைகளை மதிப்பீடுவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக்காரரினால் பட்டியல் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்தகாரரினாலும் திணைக்களத்தின் தொழிலுட்நுட்ப உத்தியோகத்தரினாலும் அளவிடைகள் மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட அளவிடைப் பத்திரங்களும் கோவையில் காணப்படவில்லை.

(ஆ) ரூபா 300 மில்லியன் தொகையான செயற்திட்டத்தின் கீழ் ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தின் நூலகத்திற்கு தளபாட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 யூலை 18 ஆந் திகதிய BR/PR/Lit/05 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தின் நூலகத்தை நவீனமயப்படுத்துவதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் தேவையான புத்தகங்கள், அலுமாரி, மேசைகள், கதிரைகள், இராக்கைகளுக்காக ரூபா 2,844,763 கூட்டுத்தொகையான தொற்றாத நோய்களுக்கான ஆராய்ச்சி செயற்திட்டத்தின் நிதி பயன்படுத்தப்பட்டு செலவிடப்பட்டிருந்தது. அது தொற்றாத நோய்களுக்கான ஆராய்ச்சி செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணான செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(ii) இந்த வழங்குனர் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்காக பதிவு செய்துள்ளமையை உறுதிப்படுத்தாது திணைக்களத்தால் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக ரூபா 49,908 தொகை வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) திருகோணமலை ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆண் வாட்டு நிர்மாணம்

-----------------------------------------------------------------------------------------------------------------------

திருகோணமலை ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆண் வாட்டினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் ஆரம்பக் கொடுப்பனவின் போது பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியான ரூபா 771,571 இல் 10 சதவீதம் நிறுத்தி வைத்தல் பணம் கழிக்கப்பட்டு பெறுமதி சேர் வரி சேர்கப்பட்டமையால் செலுத்த வேண்டிய தொகை ரூபா 777,743 ஆக இருந்த போதிலும் அதற்காக ரூபா 854,901 தொகை செலுத்தப்பட்டமையால் ரூபா 77,158 தொகை மேலதிகமாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------

பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் பிக்குகளின் வாட்டிற்காக தனிப்பட்ட கதவொன்றைப் பொருத்துவதற்கு ரூபா 47,887 தொகையான மதிப்பீடொன்று திணைக்களத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் முன் அங்கீகாரமின்றி ரூபா 124,465 தொகையான கிரயத்தில் இரண்டு கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன.

## 4.14 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 2012 யூலை 11 ஆந் திகதிய 02/02/10/02/-07(1) ஆம் இலக்க ஆயுர்வேத ஆணையாளரின் கடிதத்தின் மூலம் 2012 யூலை 13 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்வகையில் வென்னப்புவ பிரதேச சபைக்கு மட்டக்களப்பு பஞ்சந்தொடுவாசி ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஆயுர்வேதத் திணைக்களத்தால் 15 மாத காலத்திற்கு ரூபா 548,376 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. திணைக்களத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. பிழையாக சம்பளம் செலுத்தியமை தொடர்பாக

அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொஸ்வின்ன ரஜமஹ விகாரையில் நடைபெற்ற 2014 ஆம் ஆண்டின் தலையில் எண்ணெய் தேய்க்கும் அரசாங்க விழாவிற்கு ரூபா 175,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 160,480 கிரயமான பராளை, ரீப்பை, பலகைகள் மற்றும் ரூபா 6,000 கிரயமான சிவப்பு வெல்வெட் துணி என்பன மீளவும் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கோ அல்லது மீண்டும் விற்பனை செய்வதற்கோ அல்லது அந்த விகாரையின் பயன்பாட்டிற்கு கொடுக்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தலொன்றோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.15 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 256 | 222 | 34 |
| (ii) | மூன்றாம் நிலை | 164 | 73 | 91 |
| (iii) | இரண்டாம் நிலை | 275 | 148 | 127 |
| (iv) | ஆரம்ப நிலை | 888 | 663 | 225 |
| | மொத்தம் | 1,583 | 1,106 | 477 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 477 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்கு சொந்தமான வைத்தியசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான வைத்தியர்கள் மற்றும் தாதிகள் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| வைத்தியசாலை | வைத்தியர்கள் | | தாதிகள் | |
|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
| பொரளை வைத்தியசாலை | 115 | 115 | 40 | 30 |
| யக்கல வைத்தியசாலை | 10 | 14 | 20 | 18 |
| அம்பாந்தோட்டை வைத்தியசாலை | 14 | 10 | 20 | 05 |
| கைதடி வைத்தியசாலை | 09 | 09 | 04 | 01 |

- ❖ பணிப்பாளர் மற்றும் பிரதிபணிப்பாளர்களை தவிர்த்து வைத்தியர்களின் எண்ணிக்கை கணிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) யக்கல வைத்தியசாலையில் 04 ஆயுர்வேத உத்தியோகத்தர்கள் மிகையாக இருந்ததுடன் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் 4 ஆயுர்வேத வைத்தியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ii) 04 ஆயுர்வேத வைத்தியசாலையில் காணப்பட்ட 30 தாதிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொரளை மற்றும் கம்பஹா ஆகிய இரண்டு வைத்தியசாலைகளிலும் 2013 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் பதவிகளின் கடமைகள் பதில் கடமை உத்தியோகத்தர்களினால் மேவுகை செய்யப்பட்டிருந்தன.

(iv) கைதடி வைத்தியாசலையில் 2008 ஆம் ஆண்டிலிருந்தும் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் 2010 ஆம் ஆண்டிலிருந்தும் பணிப்பாளர் மற்றும் பிரதி பணிப்பாளர் பதவிகளின் கடமைகள் பதில் கடமை உத்தியோகத்தர்களின் மூலம் மேவுகை செய்யப்பட்டிருந்தன.